விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 343 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 10 திங்கட்கிழமை (27.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### தமிழினத்தின் உரிமைக்காக போராடி இன்னுயிர் நீத்த

# மாவீரர்களை நினைவேந்த துயாரானது தமிழர் தாயகம்

- கண்ணீரில் நனையக் காத்திருக்கும் துயிலுமில்லங்கள்.
- அஞ்சலிக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்.
- மாலை 6.05 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றி நினைவேந்தல்.
- பொலிஸ், இராணுவ, புலனாய்வாளர்களின் கெடுபிடிகளும் தாராளம். (15ஆம் பக்கம் பார்க்க)




### யாழ்.பல்கலைக்கழகத்தில்
## தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் 69 ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ். பல்கலை மாணவர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. 15



## மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு தொடரும் பொலிஸாரின் இடையூறு

(யாழ்ப்பாணம்)
மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு பொலிஸாரின் இடையூறு தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தாயகத்திலும் புலத்திலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ள நிலையில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு இடையூறு ஏற்படுத்த பொலிஸார் பல வழிகளில் முயற்சி செய்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல்வேறு மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் வழக்கமாக மாவீரர் நாள் நினைவேந்தல் இடம்பெறும் இடங்களில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் மாலை குறித்த பகுதிக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்தினுடைய கட்டளைகளை வழங்கி அங்கு 15

## பிரபாகரன் திரும்பி வருவார் நம்பிக்கையுடன் இருக்கின்றோம்
### மதிமுக பொதுச் செயலாளர் வைகோ



(சென்னை)
பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் எனவும் பிரபாகரன் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் உள்ளோம் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை 15

## தமிழ்த் தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு
### புதுக்குடியிருப்பில் கதவடைப்பு

(புதுக்குடியிருப்பு)
தமிழ்த் தேசிய மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர்களை கௌரவிக்கும் முகமாக வழமைபோன்று இன்றும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் முழுமையான கதவடைப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அதன்படி இன்றைய தினம் மருந்தகங்கள் தவிர அனைத்து கடைகளும் பூட்டப்பட்டிருக்கும் இந்த கதவடைப்பு போராட்டங்களினால் 15

### 2024 ஒக்ரோபர் 16
## ஜனாதிபதித் தேர்தல்?

(கொழும்பு)
2024ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் எனவும், வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் நிதி ஒதுக்கீடு 15

### பருத்தித்துறையில் வாள்வெட்டு
## இளைஞன் படுகாயம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கந்தவுடையார் ஒழுங்கை, பருத் 15

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைத் தேடி
### முல்லையில் 4ஆவது நாளாக அகழ்வு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் ஆயுதங்களை தேடி, நான்காவது நாளாகவும் நேற்று அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த 23 ஆம் திகதி முதல் அகழ்வுப் பணிகள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ். பல்கலையில் மாவீரர் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் வாரத்தின் ஆறாம் நாள் நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

மாவீரர் வாரம் கடந்த செவ்வாய்கிழமை (21) ஆரம்பமாகிய நிலையில், ஒவ்வொரு நாளும் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்றைய தினம் பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர் தூபிக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப்படுத்தும் வகையில் நினைவேந்தலுக்கு தேவையான பொருட்களை சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்விற்கு தடையுத்தரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, தரவை, மாவடிமுன்மாரி ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று மட்டக்களப்பின் பல்வேறு பொலிஸ் நிலையங்கள் ஊடாக 19 பேருக்கு எதிராக நீதிமன்றங்களின் தடையுத்தரவு கட்டளை பெறப்பட்டு தடையுத்தரவுகளை வழங்கும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

அதனை தொடர்ந்து நேற்று கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் உள்ள மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்ற பொலிஸார் அங்கு முன்னெடுக்கப்பட்டு வந்த ஏற்பாட்டு பணிகளை இடை நிறுத்தியதுடன் அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகள் மற்றும் மாவீரர் நினைவுக்கல் என்பவற்றினை அகற்றுமாறும் குறித்த இடத்தில் நினைவேந்தல் நடாத்த முடியாது எனவும் தெரிவித்த நிலையில் அங்கு முன்னெடுக்கப்பட்ட ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டு பொருட்கள் ஏற்பாட்டாளர்களினால் கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது முன்னாள் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனிற்கு மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்குபற்ற முடியாது என நீதிமன்ற தடை கட்டளையும் வழங்கப்பட்டது.

இதேபோன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், அருட்தந்தை ஜெகதாஸ், முன்னாள் மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் சத்தியசீலன் உட்பட 19 பேருக்கு எதிராக தடையுத்தரவு வழங்கும் பணிகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,9)



திருக்கார்த்திகை உற்சவ தினமான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று மாலை சொக்கப்பனை எரித்தலும் எம்பெருமான் கஜவல்லி மகாவல்லி சமேத முத்துக்குமாரராய் கைலை வாகனத்தில் எழுந்தருளும் காட்சியும் இடம்பெற்றது.




திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் திருக்கார்த்திகை தினமான நேற்று மாலை மகாதீபம் ஏற்றப்பட்டது.

# தடைப்பட்ட அபிவிருத்திகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும்

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டின் வங்குரோத்து நிலை முடிவுக்கு வந்துள்ளதால், தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவான "உறுமய" தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சியின் முதல் கட்டம் அனுராதபுரம், நொச்சியாகமவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் தொழில் முயற்சி கிரர்மமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்றுமதி [illegible] வலுப்படுத்த முடியுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக விவசாய நவீனமயமாக்கல் சேவை நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள "உறுமய" என்ற காணி உறுதிப்பத்திரம் வழங்கும் திட்டத்துக்காக இரண்டு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,9)

கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வளர்மதி சுரேஷ்
அவர்களின் பாசமிகு தந்தை
அமரர்
தியாகராசா வல்லிபுரம்
தோற்றம் : 25.02.1939
மறைவு : 26.11.2023

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
(18019)

கணிதம்
தனி/குழு வகுப்புகள்
தரம் 6 முதல் G.C.E(O/L) வரை நடைபெறுகின்றன
தரம் 6 (2024)
புதிய வகுப்புகள் ஆரம்பம்
01.12.2023(வெள்ளி)
மேலதிக விபரங்கட்கு
076 676 9675
635, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(18004)

வேலை வாய்ப்பு
யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.
■ சமையலாளர்
■ சமையல் உதவியாளர்
ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்
077 214 1214
(C-7734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்திருந்தால்

# நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டிருக்கலாம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நாட்டை இன்னும் குறுகிய காலத்திலேயே நெருக்கடியிலிருந்து தன்னால் மீட்டிருக்க முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



மாத்தளை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நமக்காக அன்றி எதிர்கால சந்ததியினருக்காகவே நாடு கட்டியெழுப்பப்படுகிறது. தம்மைப் பற்றி மாத்திரமே சிந்திக்கும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதே சிறந்த வழியாகும்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் அடுத்த தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தை பெற முயற்சிக்கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த பொருளாதார சவாலுக்கு முகங்கொடுத்து எவரும் நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை எனவும் ஆளும்கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க தான் சவாலை ஏற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தமக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவுகூருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

## அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்கு தேவையான அரிசியை விநியோகிப்பதற்காக அரிசி கையிருப்பு ஒன்றை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாரிய ஆலை உரிமையாளர்கள் அரிசியினை மறைத்து வைத்திருப்பதால் தற்போது சந்தையில் கீரிச்சம்பா மற்றும் சம்பா அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி பண்டிகைக் காலங்களில் அரிசித் தட்டுப்பாட்டைத்தவிர்க்கும்வகையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கீரிச்சம்பா அரிசிக்கு நிகரான அரிசி வகை இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன் சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வகையில் அரிசி ஆலை உரிமையாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி)

## வைத்தியர்களின் சம்பளத்தை அதிகரிக்க யோசனை

(கொழும்பு)

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க சுகாதார அமைச்சு யோசனைகளை முன்வைத்துள்ளது.

நீண்டகாலமாக தீர்க்கப்படாத சம்பளம் மற்றும் ஏனைய தொழில்சார் பிரச்சினைகள் காரணமாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளமையினால் இது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இந்தப் பிரேரணையின் பிரகாரம், முதன்முறையாக சேவையில் சேரும் வைத்தியர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தை எழுபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது வைத்தியர் ஒருவருக்கு ஆரம்பகட்ட சம்பளமாக 54000 ரூபாய் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நுண்ணுயிர் எதிர்ப்பிகளால் வருடமொன்றுக்கு 2800 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டினால் வருடமொன்றுக்கு 2 ஆயிரத்து எண்ணூறு பேர் வரை உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் உலகளாவிய ரீதியில் வருடமொன்றுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாட்டினால் 7 லட்சம் பேர் வரை உயிரிழப்பதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

நுண்ணுயிர் எதிர்ப்பிகள் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

## மாவீரர் நாள் நிகழ்வுகளை குழப்பும் இலங்கை அரசு

### நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கடும் கண்டனம்

(லண்டன்)

தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை இலங்கை அரசு குழப்புவதற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் நாளை நினைவுகூருவதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்த தமது பிள்ளைகளை இழந்த உறவுகளையும் பொதுமக்களையும் மற்றும் முன்னாள் போராளிகளையும்கைதுசெய்தமைமற்றும் மாவீரர் துயிலும் இல்லங்களை தகர்த்து அழித்தமையை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

சர்வதேச நியதிப்படி இறந்தவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உண்டு. சிங்களப் பேரினவாத அரசு மீண்டும் மீண்டும் தனது கோர முகத்தைக் காட்டி நிற்கின்றது.

மாவீரர்களை எந்தத் தடைகளுமின்றி நினைவுகூர சர்வதேசம் உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

## சீனியில் நிறச்சாயம் வெளிவரும் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வெள்ளைச் சீனியுடன் சாயத்தை கலந்து சிவப்புச் சீனியாக மாற்றி அதிக விலையில் விற்பனை செய்து வருவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

சமகாலத்தில் சந்தையில் நிலவும் சீனித் தட்டுப்பாட்டை பயன்படுத்தி இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கத்தின் தலைவர் நிருக்ஷகுமார தெரிவித்துள்ளார்.

217 ரூபாவிற்கு கொண்டுவரப்படும் வெள்ளை சீனிக்கு சாயம் பூசி 350 முதல் 370 ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்மூலம் இந்த வியாபாரிகள் ஒரு கிலோ சீனிக்கு சுமார் 150 ரூபாய் இலாபம் ஈட்டுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது வெள்ளை சீனிக்கு 275 ரூபாவும் சிவப்பு சீனிக்கு 330 ரூபாவும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பொதி செய்யப்பட்ட வெள்ளை சீனியின் கட்டுப்பாட்டு விலை 295 ரூபாவாகவும் பொதி செய்யப்பட்ட சிவப்பு சீனியின் ஒரு கிலோவின் விலை 350 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஜனாதிபதி உட்பட 80 உயர்அதிகாரிகள் துபாய் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் காலநிலை தொடர்பான மாநாட்டுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தின் 80 உயர் அதிகாரிகள் அடுத்த வாரம் துபாய் செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தன உள்ளிட்ட 80 பிரதிநிதிகள் இந்த பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் காலநிலை தொடர்பான மாநாடு அடுத்த வாரம் துபாயில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி



(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.54 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.58 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.85 அமெரிக்க டொலராக வீழ்ச்சிப் போக்கை பதிவு செய்துள்ளது. (நி)

## பாரியளவில் அதிகரித்த எலுமிச்சையின் விலை

(கொழும்பு)

இலங்கையில் எலுமிச்சைப் பழத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில், ஒரு கிலோ எலுமிச்சைப்பழத்தின் விலை, 2000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தற்போது பெய்து வரும் கன மழை காரணமாக, எலுமிச்சை அறுவடை குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனால் எலுமிச்சைப்பழங்களின் தேவை அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த காரணங்களே, எலுமிச்சைப்பழத்தின் விலை உயர்வுக்குக் காரணமாகியுள்ளதென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# பிரேசிலை வீழ்த்திய மெஸ்ஸி படை

உலகக்கிண்ண தகுதிச்சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டினா அணி 1-0 என்ற கோல்க் கணக்கில் பிரேசிலை வீழ்த்தியது.

ரியோ டி ஜெனிரோவின் மரக்னா மைதானத்தில் நடந்த போட்டியில் பிரேசில் மற்றும் ஆர்ஜென்டினா அணிகள் மோதின.

பரபரப்பாக ஆரம்பித்த இந்தப் போட்டியில் இரு அணிகளும் சம பலத்துடனும் ஆக்ரோஷத்துடனும் செயற்பட்ட போதும் முதல் பாதியில் இரு அணிகளும் கோல்கள் அடிக்கவில்லை.

எனினும் இரண்டாம் பாதியின் 63 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா அணி கார்னர் கிக்கில் இருந்து வந்த பந்தை, அந்த அணியின் நிக்கோலஸ் ஒட்டமெண்டி தலையால் முட்டி கோல் மிரட்டலாக அடித்தார். அதுவே ஆர்ஜென்டினாவில் வெற்றிக் கோலாக மாறியது.




இறுதியில் ஆர்ஜென்டினா அணி 1-0 என வெற்றி பெற்றது. மேலும் புள்ளிப் பட்டியலில் 5 வெற்றிகளுடன் முதலிடம் பிடித்துள்ளது.

இந்தப் போட்டி ஆரம்பமானதில் இருந்தே ஆர்ஜென்டினா, பிரேசில் ரசிகர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. அப் போது அங்கு வந்த பிரேசிலிய பொலிஸார் ஆர்ஜென்டினா ரசிகர்கள் மீது மோசமான தடியடி தாக்குதலை நடத்தினர். (நி-5-6)

# நிதானத்திற்கு தோனி தான்!

இக்கட்டான நிலையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை தோனியிடமிருந்து தான் கற்றுக்கொண்டேன் என ரிங்கு சிங் தெரிவித்தார்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் போட்டி கடந்த 23 ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது. முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா 207 ரன்கள் குவித்தது.



பின்னர் இந்தியா 19.5 ஓவரில் இலக்கை எட்டி வெற்றி பெற்றது. சூர்யகுமார் அவுட்டானதும் கடைசி நேரத்தில் இந்திய அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. அப்போது ரிங்கு சிங் களத்தில் இருந்தார். கடைசி ஓவரில் 7 ரன்கள் தேவைப்பட்டது.

முதல் பந்தை ரிங்கு சிங் ஆஃப்சைடு பவுண்டரிக்கு விரட்டினர். அடுத்த பந்தில் ஒரு ரன் கிடைத்தது. அதன்பின் அடுத்த மூன்று பந்துகளில் இந்தியா விக்கெட்டுகளை இழந்தது. இதில் இரண்டு ரன்அவுட் ஆகும்.

கடைசி பந்தை ரிங்கு சிங் சந்தித்தார். இக்கட்டான நேரத்தில் அவர் நெருக்கடிக்கு உள்ளாகவில்லை. நிதானமாக பந்தை எதிர்கொண்டு லாங்-ஆன் திசையில் சிக்ஸ் விளாசினார். இந்த பந்து நோ-பால் என அறிவிக்கப்பட்டது.

இதனால் இந்தியா வெற்றி பெற்றது. இருந்தபோதிலும், இக்கட்டான நிலையில் கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தது அனைவரையும் ஆச்சர்யத்திற்கு உள்ளாக்கியது. ரிங்கு சிங்கிடம் திறமையும் நிதானமும் இருக்கிறது என விமர்சகர்கள் பாராட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் தல தோனியிடம் இருந்துதான், இக்கட்டான நிலையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று கற்றுக் கொண்டேன் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# ஓய்வை அறிவித்தார் பாகிஸ்தான் வீரர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரர் இமாத் வாசிம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

34 வயதான இமாத் வாசிம், இறுதியாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணிக்காக விளையாடினார். அதன்பின்னர் அவருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

பல ஆண்டுகளாக, 50 மற்றும் 20 ஓவர் போட்டிகளில் பாகிஸ்தான் அணிக்காக சிறப்பான சகலதுறை ஆட்டக்காரராக வலம் வந்தார்.

2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம் பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்தார். மேலும் சில ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணிக்கு தலைமை தாங்கியிருந்தார்.

அதன்பின் அண்மைக்காலமாக அணியில் வாய்ப்புக் கிடைக்காமல் போராடினார். இந்நிலையில், தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் உள்ளூர் லீக் தொடர்களில் விளையாடவுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உர விலை குறைப்பு
## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இந்தப் பருவத்தில் MOP உரத்தின் விலையை 9000 ரூபாவாகக் குறைக்க அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.

19,000 ரூபாவுக்கு விற் பனை செய்யப்பட்ட MOP உர மூட்டை ஒன்றின் விலையை 9000 ரூபாவாக குறைப்பதற்குத் தாம் முன் வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி அரசாங்கத் திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் Mop உரத்தை 9000 ரூபா விற்கு வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித் தார். (நி)

# கிராம அலுவலர் வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்
## இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்துக் கிராம உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படும் என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.


வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு விண்ணப்பங்களை அனுப்பிய தகுதியான தேர்வுத் தேர்வர்களுக்கு கிராம அலுவலர் தேர்வை டிசெம்பர் 2ஆம் தேதி தேர்வுத் துறை நடத்த உள்ளது.

தேர்வில் இருந்து கிராம அலுவலர் பணியிடங்களுக்கு 2,238 பேர் தேர்வு செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# காலிக்கோட்டையை பார்வையிட கட்டணமில்லை- பத்திரன

(கொழும்பு)



காலிக்கோட்டைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் பணம் அறவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். காலி கோட்டைக்குள் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து 15 டொலர்களை வசூலிக்க காலி ஹெரிடேஜ் அறக்கட்டளை தீர்மானித்திருந்தது. அதற்கு பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியிருந்ததோடு எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரி

இப்போது...

இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் இயங்குகிறது.

(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3121

021 222 3378


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சரத்சந்திரா செல்வறஞ்சினி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

செல்வன். சரத்சந்திரா யானுசன்

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விகற்று 2023 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 146 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளார்.

இவரை அப்பா, அம்மா ஆகியோருடன் இணைந்து பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியில் மேலும் உயர்வடைந்து சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்படைய ஆசீர்வதிக்கின்றோம்.

அப்பப்பா (தமிழ்க்குழந்தை), அப்பம்மா (விக்கினேஸ்வரி)

(16015)

# இராசிபலன்

27.11.2023
கார்த்திகை 11, திங்கட்கிழமை
பூரணை பிற்பகல் 3.06 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 2.24 மணிவரை
சுபநேரம் -12.12-01.42 மணிவரை
இராகுகாலம்-07.42-09.12 மணிவரை
விஷ்ணுவாலய தீபம், பூரணை விரதம்

சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி.

வளவன்

**மேஷம்** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோகப் பெருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகம் உண்டு.

**விருச்சிகம்** தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத் துழைப்பு வழங்குவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** எடுத்த காரியத்தை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்திகாண வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** மறைமுக எதிர்ப்புகள் மாறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

துணிந்தவனுக்கு வெட்கமில்லை.அழுதவனுக்கு துக்கமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு டிப்பர்களும் சாரதிகளும் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வீதியில் பயணித்த குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் ஆறு டிப்பர்களும் அதன் சாரதி களும் தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணை களின் பின் பொலிஸ் பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிடி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# பிரபாகரனின் 69 ஆவது பிறந்தநாள் வல்வெட்டித்துறையில் கொண்டாடப்பட்டது





(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலி களின் தலைவர் வே. பிரபா கரனின் 69 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு.நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பா ணத்தில் கேக் வெட்டி கொண் டாடப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட் டில், வல்வெட்டித்துறை ஆலடி சந்திக்கு அருகில் உள்ள புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணியின் முன்னால் இடம்பெற்றது. (நி-33-104)

## விநாயகர் விரதமும் இலட்சார்ச்சனையும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை-வீணாக் கடவை கருணைமிகு காசி விநாயகர் தேவஸ்தான விநா யக விரதமும் இலட்சார்ச்சனை யும் நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம் மார்கழி 17 ஆம் திகதி வரை இடம்பெற வுள்ளது.

நாளை முதல் தினமும் காலை 8.30 மணிக்கு அபி ஷேகமும் 9.30 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து 10 மணிக்கு இலட்சார்ச்சனை யும் ஹோமமும் இடம்பெறவுள் ளன. இதேவேளை எதிர்வரும் 17ஆம் திகதி இலட்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம்பெறவுள் ளது. (நி)

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றவர்களுக்கு நியமனக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

புதிதாக சமாதான நீதி வான்களாக நியமனம் பெற்ற ஒரு தொகுதியினருக்கு அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா வினால் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நீதி அமைச்சுக்கு அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா பரிந்துரை த்ததன் அடிப்படையில் சமா தான நீதிவான்களாக உள் வாங்கப்பட்டு நீதி அமை ச்சினால் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.



இதனடிப்படையில் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் வைத்து நியமனம் பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா வழங்கிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)



2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி செல்வி. ருஷானி கலைச்செல்வனுக்கு பாடசாலையின் நலன்விரும்பியும் சமூக சேவையாளருமாகிய கனடாவில் வசிக்கும் சண்முகம் சரத்சந்திரனால் துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டது.



மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் நடை பெற்றது. (படம்-தேவானந்தன்)






## விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய விநாயகர் விரதம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இக்காலங்களில் தினமும் காலை 9 மணிக்கு சகஸ்ஹரநா மார்ச்சனையும் பி.ப 4 மணி முதல் பிள்ளையார் கதை படி ப்பு, உருத்திரா அபிஷேக ஆராதனை, ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட வசந்த மண்டபூசை, விநாயகர் அக வல் பாராயணம் என்பன நிகழ வுள்ளன.

இறுதி நாளான அடுத்த மாதம் 18 ஆம் திகதி காலை கணபதிஹோமமும் இடம் பெறுமென ஆலய தர்மபரிபால சபை அறிவித்துள் ளது. (நி-5)

யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத் தில் கல்வி கற்கும் 19 மாணவர்களுக்கு சதாசிவம் பிள்ளை சிறிக்காந்தனால் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 700 | 700 |
| தக்காளி | 400 | 550 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 300 | 450 | 400 | 550 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 240 |
| வாழைக்காய் | 160 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 280 | 350 |
| பாகற்காய் | 650 | 500 | 500 | 600 |
| வெண்டைக்காய் | 250 | 220 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 700 | 650 | 600 | 700 |
| லீக்ஸ் | 300 | 320 | 300 | 400 |
| பீற்றூட் | 300 | 240 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 350 | 380 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 1300 | 1100 | 1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | 550 |
| வெங்காயப்பூ | - | - | - | - |
| முள்ளங்கி | 140 | 180 | - | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 180 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 120 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகைச் சுடரேற்றும் தெய்வீக நாள் மாவீரர் நாள்



மௌனம் சுமந்த அந்த வித்துடல், தேகம் அங்கே. மனித மனத்தில் எழும் உணர்வின் வார்த்தைகள் தன் உணர்விழந்து செத்துக்கிடந்தது.

மனங்களில் தாங்க முடியாத குமுறல்கள் தொண்டையில் வந்த வேகத்தில் வாயடைத்துக் கண்களில் நீர் சுமந்து நின்றன. கைகளில் ஒளி வத்திகளுடன் நம் உயிர் காவிய உடல்களைத் தொலைத்ததினால் உளம் சோர்ந்து, உடல் கனத்து நின்றனர்.

விடிவுக்காய் உயிர்கொடுத்து தாய் மண்ணின் மானம் காக்க இன்னமும் தொப்புள் கொடி அறுபட்டுப் போகாமல் துயிலுமில்லக் கருவறையில் கல்லறைகளாக எம் மண்ணின் பூபாளக் கனவுகளுடன் தூங்கும் தம் உறவுகளுக்காய் அன்னையர், தந்தையர் இன்னும் ஓராயிரம் உறவுகள்.

அலை தடவி, மண்ணின் மடி தவழ்ந்து, மலர்களின் மணம் சுமந்து வந்த காற்றின் இளவல் கூட மௌனமாக அஞ்சலி செலுத்திச் சென்றன. வானம் தன் இமைகளை மூடி மெல்லக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிவரியும் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பிலும் உருவான பாடல் மேலும் எம் எல்லோரையும் அமைதியாக்கி நெஞ்சை விட்டு விலகாது மூளையில் பதிவாகி நீள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! இங்கு
கூவிடும் எங்களின் குரல் மொழி கேட்குதா...?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம்- அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்
எங்கே! எங்கே! ஒரு தரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்...

இன்று மாவீரர் நாள். உங்களைத் தந்து நீங்கள் உள்ளுக்குள் உறங்குகிறீர்கள். உதிரத்தால் ஈழம் எழுதி உயர்ந்து கொண்டீர்கள். தேசத்தில் நெருப்பெறிந்த பொழுது உங்கள் தேகத்தை எரித்தீர்கள். தியாகச் செம்மல்களின் நாளிது. விடுதலை வேண்டி வித்துடல் கொண்ட வீரர்களின் நினைவழியா நாளிது. எத்தனையோ துன்பங்களையும் சுமந்து எம் துயரங்களைந்து துயிலுமில்லம் விளைந்த வேங்கைகளே, தாய் மண் அழுதபோது சுதந்திரக் காற்றை செந்நீரால் எழுதியவர்களே! எத்தனை கனவுகளைக் கண்டிருப்பீர்கள். ஏக்கங்கள் ஐயாயிரம் கொண்டிருப்பீர்கள். பெற்றவர், உறவுகள் மதித்து வந்தீர். ஒரு புன்னகைக்குள் புயல் மூடி வைத்தீர்கள். அத்தனை சுமையையும் ஏன் சுமந்தீர்கள். எம் அன்னை மண் விடுதலை வேண்டியல்லோ? செத்தவர் என்று உம்மைச் செப்புவோமா? இந்த சென்மத்தில் நினைந்திடத் தப்புவோமா? குத்து விளக்கும் நீரல்லவோ? நாம் கும்பிடும் தெய்வமும் நீரல்லவோ? நித்தமும் வாழுவீர் மாவீரர்களே எம் நெஞ்சுகளில்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 29 இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்பட்டாலும் மக்கள் உணர்வுடன் பல்வேறு இடங்களில் மாவீரர் நாளினை நினைவுகூருகின்றார்கள்.

**இளமைக்கால இனிமைகள் யாவும் திறந்த வேங்கைகளே...**

விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாவீரர் பாடல்கள் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. அப் பாடல்களில் இடம்பெறும் வரிகளும் குரல்களும் இசைகளும் வலிமையானவை. உதாரணமாக ஒரு பாடலை முன்வைக்கலாம். இப் பாடலைப் புதுவை இரத்தினதுரை எழுதினார்.

வேங்கைகளின் விடுதலை வேதங்கள் என்ற ஒலி நாடாவில் மதுரக்குரலோன் எஸ்.ஜீ. சாந்தன் பாடினார்.

**விண்வரும் மேகங்கள் பாடும்**
**மாவீரர்களின் நாமங்கள் கூறும்**
**கண் வழி கங்கைகள் பாயும்-இவர்**
**காவிய நாயகர் ஆகும்.**
**புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்.**
**எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்.**

விதையுண்டு போன வீரப் பிள்ளைகளை எண்ணி வதையுண்டு கிடக்கிறது வாசல்கள். போர்க்களம் புகுந்து ஆவி கொடுத்தோரை அழைக்கும் நாள். துயிலுமில்லம் சென்று தொட்டெழுப்பும் நாள்.

மெல்லொலியால் உள்ளே மூச்சைக்கேட்கும் நாள்.

கார்த்திகை மாதத்து மழைத் தூற்றல் இந்த நாளுக்கான கண்ணீர் தான்.

அழுக்கெல்லாம் கழுவி அள்ளிச் செல்லவே வீதி எங்கும் வெள்ளம் பாய்கிறது. கோடி மலர்கள் கார்த்திகையில் பூப்பது வாடிவிழவல்ல. கல்லறைக்கென்றே செடிகள் கருத்தரிக்கின்றன.

தனக்குள் உறங்கும் சந்தன மேனி குளிரட்டும் என நீரை உறிஞ்சிக் கொள்கிறது நிலம்.

கார்த்திகை 27 கண்ணீர் நாள் அல்ல. ஆயினும் நெஞ்சில் ஆயிரம் ஆணிகளேறுகின்றன. சிலுவையில் அறைவது போல் தேகம் வலிக்கிறது. யாருக்கென்று தான் அழுவது? எவருக்கென்று தான் ஏற்றுவது சுடர். எந்தக் கல்லறைக்குப் பூவாரி இறைப்பது. வேரெல்லாம் ஒன்றான பின்னர் கிளைகளுக்குள்ளே பேதங்கள் ஏது? எல்லாக்கிளைகளும் எமது, எல்லாப் பூக்களும் எமது, எல்லாக் குழிகளும் எமது, எல்லாப் பிள்ளைகளும் எமது கனவின் மொழியை ஒத்தெழுதிய கவிதைகளுக்கு அனற் சுடரேற்றி அஞ்சலிக்கின்றோம்.

கார்த்திகை 27 காவற் தெய்வங்களின் காணிக்கைத் திருநாள். ஊர் திரண்டு ஒப்பாரி வைப்பதில்லை. உருக் கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கிறது. சாவடைந்த பின்பும் இவர்களுக்கோர் சக்தி இருந்தது. இது கார்த்திகை மாதம். ஊர் முற்றம் எங்கும் ஒளி வெள்ளம். சுடர் ஏற்றித் தொழுகின்றோம்.

பாட்டோடு சேர்ந்த பரவசம் உறவுகளே
கேட்கிறதா கோயில் மணி
கேட்கிறதா நெஞ்சுருக்கும் பாடல்
தெரிகிறதா சுடரும் நெய் விளக்கு.

**ஜெயம் ஜெகன்**



மாவீரர் நாள் நிகழ்வை முன்னிட்டு கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் முன்னாள் போராளிகள், மாவீரர் பெற்றோர் மற்றும் உறவினர்களால் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

## யாழ்.பண்ணையில் விபத்து மூன்று வாகனங்கள் சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நோயாளர் காவுவண்டியுடன் இரண்டு வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகி உள்ளன.

நோயாளர் காவுவண்டிக்கு பின்னால் வந்த முச்சக்கரவண்டி. நோயாளர் காவுவண்டியை முந்தி செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த வாகனத்துடன் மோதி நோயாளர் காவுவண்டிக்கும் எதிரே வந்த வாகனத்திற்கு இடையில் சிக்கி விபத்துக்கு உள்ளாகியது.

சம்பவம்தொடர்பில்யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளனர்.(நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# போர் விமானத்தில் பயணித்த மோடி



(டில்லி)

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான "தேஜஸ்" என்ற போர் விமானத்தில் இந்தியப் பிரதமர் நரேந்தி மோடி பயணித்துள்ளார்.

பெங்களூரில் உள்ள எச்.ஏ.எல் மையத்தில் ஆய்வு செய்த பின் விமானத்தில் பயணித்துள்ளார்.

இது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில்,

தேஜஸ் போர் விமானப் பயணம் வெற்றிகரமாக வியப்பளிக்கும் ஒன்றாக இருந்தது என்றார். மேலும், இந்திய நாட்டின் சுயசார்புத் திறன் குறித்த நம்பிக்கையை கணிசமாக உயர்த்தியது எனவும் அவர்களின் திறன் குறித்த பெருமிதம் நம்பிக்கையை பன்மடங்கு அதிகரித்தது எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# முடிவுக்கு வரும்
# சண்டையை தீவிர

(காசா)

**காசா மீதான 4 நாட்கள் போர் நிறுத்தம் இன்**
**வருகிறது. அதன்பின் தாக்குதல் தொடரும் என்று இ**
**பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.**

இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது காசாவில் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததும் தீவிரமாக சண்டையை தொடர திட்டமிட்டுள்ளோம்.

இன்னும் ஹமாஸின் பல இலக்குகள், பல சுரங்கங்கள் தகர்க்கப்பட உள்ளன.

அவற்றில் சிலவற்றை போர் நிறுத்தம் தொடங்குவதற்கு முன்பே அழித்து விட்டோம்.

போர் நிறுத்தம் முடிவு
வந்த பிறகு ஹமாஸ் அ
ப்பின் பல சுரங்கங்கள்
க்கப்படும்.

கூடுதல் இஸ்ரேல் பண
கைதிகள் விடுவிக்கப்

# மும்பைத் தாக்குதலின் 15 ஆவது ஆண்டு நிறைவு



(டில்லி)

மும்பைத் தாக்குதலின் 15 ஆவது ஆண்டு நிறைவு நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு 10 பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடல்வழியாக ஊடுருவி சத்ரபதி சிவாஜி ரயில்நிலையம், தாஜ் ஹோட்டல், ஓபராய் ஹோட்டல், அரசு மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடத்திய தாக்குதலில் வெளிநாட்டவர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர்.

300 பேர் காயம் அடைந்தனர். அதன் நினைவு தினம் மும்பையில் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களினால் அனுஷ்டிக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# 30 ஆண்டுகளின் பி
# உலகின் மிகப் பெ

30 ஆண்டுகளாக கடல் அடிவாரத்தில் சிக்கி இருந்த உலகின் மிகப் பெரிய பனிப்பாறை வேகமாக நகர ஆரம்பித்துள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டு அந்தாட்டிகா பகுதியில் இருந்து ஏ23 எனும் பனிப்பாறை உடைந்து பிரிந்து கடலுக்குள் நுழைந்தது. தற்போது உலகின் மிகப் பெரிய பனிப்பாறையான இது வெட்டெல் கடல் பகுதியில் ஒரு பனித் தீவாக மாறியது.

4,000 சதுர கிலோ மீற்றர் நீளம் கொண்ட லண்டனை விட இரண்டு மடங்கு பெரிய இப்பாறை சில காலமாகவே ஆழமற்ற கடல் பகுதியில் சிக்கிக் கொண்டிருந்தது.

சுமார் ஒரு ட்ரில்லியன் தொன் எடை கொண்ட இப்பனிப்பாறை, வேகமாக பயணிப்பது போல தெரிகிறதாக பேராசிரியர் ஏட்ரியன் லக்மேன் தெரிவித்துள்ளார்.

இந்த பனிப்பாறை 400 மீ (1,312 அடி) தடிமன் கொண்டது. 310 மீ உயரம் கொண்ட லண்டன் ஷார்ட், ஐரோப்பாவின் மிக உயரமான கட்டடங்களின் உயரத்தை விட உயரம் கூடுதலாக உள்ளது.

இது ஒரு பிரம்மாண்ட மான பனிப்பாறை என தெரி விக்கப்படு

# உத்தரகாண்ட் தொழிலாளர்களை மீட்க ஒரு மாதம் ஆகும் சர்வதேச சுரங்க நிபுணரின் அறிவிப்பால் பரபரப்பு


(டில்லி)

உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர்காஷியில் சுரங்கம் தோண்டும் பணியின் போது திடீரென ஏற்பட்ட விபத்தால் சுரங்கத்தின் ஒரு பகுதி மூடியதன் காரணமாக அங்கு பணியில் ஈடுபட்டு வந்த 41 தொழிலாளர்களும் சுரங்கத்திற்குள் சிக்கிக் கொண்டனர்.

தற்போது வரை சுரங்கத்தில் சிக்கியவர்களுக்கு தேவையான உணவு அதற்கென உருவாக்கப்பட்ட குழாய் மூலம் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. மீட்பு பணிகளின் போது பல்வேறு இடர்பாடுகளால் அடிக்கடி இடையூறு ஏற்படுகிறது. அந்த வகையில், சுரங்கத்திற்குள் துளையிடுவதற்காக அமெரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆகர் இயந்திரம் மூலம் துளையிடும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

எனினும், ஆகர் இயந்திர தகடுகள் சிக்கிக் கொண்டதால் சுரங்கத்திற்குள் சிக்கியிருக்கும் 41 தொழிலாளர்களை மீட்கும் பணிகளில் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது. இதன் காரணமாக துளையிடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

"சுரங்கத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் ஆகர் இயந்திர தகடுகளை வெட்டி அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகர் இயந்திரத்தின் 16 மீற்றர்கள் வரை வெட்டி அகற்றப்பட வேண்டும் [illegible]



எடுக்கப்படுவதால், ஆகர் இயந்திர தகடுகளை வேகமாக அகற்ற முடியும்." என்று மீட்பு பணிகளில் ஈடுபட்டு வரும் சுரங்க நிபுணரான க்ரிஸ் கூப்பர் தெரிவித்து இருக்கிறார்.


"இந்த பணிகள் முழுமையாக நிறைவு பெற நீண்டகாலம் ஆகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# போர் நிறுத்தம் ...ரப்படுத்த திட்டம்!

...ன்றுடன் முடிவுக்கு
...வு இஸ்ரேல் பிரதமர்



...முடிவுக்கு ...ம் அமை ...கள் அழி ... பணயக் ...க்கப்பட்ட விட்டால் போர் நிறுத்தம் இன்றுடன் காலாவதியாகும். காசா மக்கள், வடக்கு பகுதிக்கு செல்ல இஸ்ரேல் பாதுகாப்புப் படை அனுமதிக்காது என அவர் தெரிவித்தார். (நி)

## இசை நிகழ்ச்சியில் நெரிசல் 4 மாணவர்கள் உயிரிழப்பு

(டில்லி)

கேரள மாநிலம், கொச்சி பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 4 மாணவர்கள் உயிரிழந்தனர். 64 பேர் காயமடைந்தனர். அவர்களில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டம் களமசேரியில் கொச்சி பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

இந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டு விழாவை ஒட்டி இசைக் கச்சேரி நடைபெற்றது.

திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இசைக்கச்சேரியை ரசிக்க ஏராளமான மாணவ, மாணவியர் குவிந்தனர். அரங்கம் நிரம்பியதால் வெளியே நின்றிருந்த மாணவ, மாணவியருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆனால் அவர்கள் முண்டியடித்து முன்னேறியதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் 4 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

64 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்தார். (நி)

## ...பின் வேகமாக நகரும் ...பெரிய பனிப்பாறை



...கிறது.

பனிப்பாறை கடந்த ஆண்டு வேகமாக நகர தொடங்கியது.

பனிக்கட்டிகளால் சூழப்பட்ட கண்டம் என்றழைக்கப்படும் வெள்ளைக் கண்டம் இக்கண்டத்தின் பனி அடுக்கில் இருந்து பெருமளவில் வெடித்த பெரும் பாறைகளின் ஒரு பகுதியாகும். (நி)

## 39 பாலஸ்தீன பணயக் கைதிகள் விடுதலை

(ஜெருசலேம்)

இஸ்ரேல் தனது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 39 பாலஸ்தீனியர்களை விடுதலை செய்துள்ளது.

ஹமாஸ் பணயக் கைதிகளை விடுதலை செய்தமைக்குப் பதிலாக இஸ்ரேல் இவர்களை விடுதலை செய்துள்ளது. கல்வீச்சு, கொலை முயற்சி உட்பட பல்வேறு குற்றச் சாட்டுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலஸ்தீனியர்களையே இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

24 பெண்களையும் 15 பதின்மவயது இளைஞர்களையும் இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.



இஸ்ரேலினால் தயாரிக்கப்பட்ட 300 பெண்கள், சிறுவர்கள் அடங்கிய பட்டியலில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி)

...விடும். மலை பகுதியில் பணியாற்றும் போது, எதையும் கணிக்கவே முடியாது. நாங்கள் இது தொடர்பான பணிகள் நிறைவடைவது குறித்து எந்த கணிப்பையும் தெரிவிக்கவில்லை." என்று தேசிய பேரிடர் நிர்வாக கூட்டமைப்பின் உறுப்பினரானசையத்அடாஹஸைன் தெரிவித்து உள்ளார்.

சுரங்கம் உருவாக்குவதில் சர்வதேச நிபுணரான ஆர்னோல்ட் டிக்ஸ், சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் மீட்க முடியும் என்று தெரிவித்து இருக்கிறார். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இன்னும் ஒரு மாத காலம் இருப்பதை அடுத்து இவரின் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. (நி)

## சுற்றுலாவை மேம்படுத்த வியூகம் அமைக்கும் சீனா



(பீஜிங்) ... ஆம் ஆண்டு பரவிய ... சீனாவில் ... கொரோனா வைரஸ் அடுத்த சில ஆண்டுகள் உலக நாடுகளையும் அவற்றின் பொருளாதாரத்தையும் ஆட்டம் காண வைத்தது. இதனால் சுற்றுலாவை நம்பியுள்ள நாடுகளின் பொருளாதாரம் பெரியளவில் சரிவைச் சந்தித்தது.

இதற்கிடையே சுற்றுலாவை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணிகளைக் கவரவும் சீனா பல்வேறு வியூகங்களை வகுத்து வருகிறது.

இந்நிலையில் வரும் டிசெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், மலேசியா ஆகிய நாட்டு மக்கள் விசா இல்லாமல் சீனாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இலங்கை உட்பட சில நாடுகள் விசா இல்லாமல் குறிப்பிட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வரலாம் என அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## உலகநீரிழிவு தினம் [November-14-2023] இனை முன்னிட்டு இக் கட்டுரை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

"உடம்பும் இரும்பும் இருக்கக் கெடும் " என்பது முதுமொழி எம் உடம்பைப் பேணுவதே ஒரு பிரயாணம் செய்வதற்கு சமனாகும். முயற்சிகள் இன்றி அப்பியாசம் செய்யாது இருப்போமாயின் மிகவும் குறுகிய காலத்தில் நோய் வாய்ப்படுவதை தவிர்க்க முடியாது.

எனவே உடற்பயிற்சி செய்வதை அத்தியாவசியமாக கருதல் அவசியமாகும். தீராத வியாதிகள் எமக்கு சம்பவிக்காது இருப்பதோடு நாம் ஆரோக்கியமாக வாழ விரும்பினால் அதற்கு உடல் உழைப்பு விரும்பத்தக்க அம்சமாகும்.

சுஸ்ருதர் எழுதிய சுஸ்ருதா சம்சிதா என்ற நூலில் நீரிழிவு நோயுள்ள நபர் தினமும் 4 மைல் தூரம் நடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். தற்கால ஆராய்ச்சிகளும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் உடற்பயிற்சி முக்கிய பங்கு வகிப்பதனை நிரூபித்துள்ளன.

உடற்பயிற்சியை வழக்கமாக செய்துவரின் பல்வேறு நன்மைகளை பெறமுடியும்.

1. இயல்பான இரத்த சீனியின் அளவை பெறல்.

2. எடை குறைதல்.

3. மாரடைப்பு அபாயம் குறைதல்.

4. உடற்தகுதி உண்டாதல் போன்ற நன்மைகள் கிடைக்கும்.

உடற்பயிற்சியை ஆரம்பிக்கும் முன்னர் மருத்துவரைக் கலந்தாலோசித்து மேற்கொள்வது சிறந்ததாகும்.

சித்தர்கள் யோகாசன முறையைக் கூட நீரிழிவின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் முக்கியமாக உள் வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நீரிழிவு நோயில் பயன்படும் மூலிகைகளாவன,

சர்க்கரைக் கொல்லி, சிறுகுறிஞ்சா, பாகல், குறிவித்தலைபாகல், ஆவரசு, பொன்னாவரசு, ஆரைக் கீரை, நாவல் விதை, கறிவேப்பிலை, கொவ்வை, நிலப்பனைக்கிழங்கு, ஆலம் பட்டை, நெல்லிவற்றல், கடல்றாஞ்சி, சிறுபூனைக்காலி, தொட்டாற்சுருங்கி, சிறு நன்னாரி, பப்பாசி, மாந்துளிர், கடுக்காய், தேற்றா விதை, சரக்கொன்றை.

இவற்றை விட வெந்தயம் ,குரக்கன், வரகு, போன்றவற்றை உணவில் தாராளமாக சேர்த்துக் கொள்ளலாம். சர்க்கரைக் கொல்லிமூலிதான் தூய இனம். பரம்பல் மிக மிக அரிது. ஆங்கிலத்தில் Sugar Killer Plant என அழைக்கப்படும்.

இதன் இலை ஒன்றை எடுத்து சப்பிச்சாப்பிட்ட பின் சிறிதளவு சீனியை வாயில் போட்டால் சீனி இனிக்காது.

இனிப்புச் சுவையரும்புகளை தற்காலிகமாக செயல் இழக்கச் செய்வதால் இனிப்பு எடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் இருக்காது.

சிறு குறிஞ்சா இது பதில் மூலி ஆகும்.(Supstitute) இதைத் தனிச் சூரணமாக பயன்படுத்தாமல் கடுக்காய், நெல்லிக்காய் (வற்றல்), தான்திக்காய் உடன் கலந்து பயன்படுத்த வேண்டும். நான்கும் ஒரேயளவாக சேர்த்துக் கொள்ள வேண்டும். சேர்த்த பொடியில் 1-2 கிராம் காலை, மாலை வெந்நீரில் சாப்பாட்டின் பின்பு எடுக்க வேண்டும்.

சிறுகுறிஞ்சா இலைப் பொடியை சிவப்பு பச்சரிசியுடன் கலந்து மாவினை பிட்டாகவோ, களி, இடியப்பமாக அவித்து பயன்படுத்தலாம்.

பப்பாசிப் பிஞ்சைு தோலுடன் கழுவிய பின்பு தோலைச் சீவி அதிலிருந்து வடியும் பாலையும் பப்பாசியின் சிறு துண்டுகளையும் 3ஆம் தேங்காய்ப்பாலில் மிளகாய், வெங்காயம் தேவையானளவு உப்பு இட்டு கறி சமைத்து பயன்படுத்தலாம். வாரத்தில் இரண்டு நாட்கள் எடுக்கலாம்.

பாகல் ,குருவித்தலைப் பாகலை நன்றாக முற்றாத வையாக எடுத்து கறிசமைத்தோ, வற்றலாக்கியோ பயன்படுத்தலாம். வாரத்தில் ஒருநாள் இவற்றில் ஏதேனும் ஒன்றில் பாகல்சாறு எடுத்து 30-60 மில்லி அளவு இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இல்லாத போது பயன்படுத்தலாம்.

குருவித்தலைப் பாகல், பாகல் காய்களை சிறுதுண்டுகளாக வெட்டி உலர்த்தியும் உணவில் பயன்படுத்தலாம். மேற்படி உலர்த்திய துண்டுகளை மரவுரலால் இடித்து 10-20 கிராம் வரை 30 மில்லி ஆடை நீக்கிய பசுப்பாலுடன் அருந்தி வந்தாலும் இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

கொவ்வைக் கிழங்கின் சாற்றில் 10 மில்லி வீதம் 3 வேளை பருகி வர நீரிழிவு கட்டுப்படும். வாரத்தில் 3 நாட்கள் இவ்வாறு பயன்படுத்தலாம்.

கறிவேப்பிலையை உருவி நிழலில் உலர்த்தி நுண்ணிய பொடியாக்கி அரித்து, ஆடை நீக்கிய பாலுடன் 4-8 கிராம் இட்டு அருந்தலாம். கறிவேப்பிலை பொடிக்குப் பதிலாக மாந்துளிர் பொடியையும் பயன்படுத்தலாம். ஆனால் 1-2 கிராம் அளவு காலை, மாலை எடுக்க வேண்டும். ஆரைக்கீரையை காம்புடன் நிழலில் உலர்த்தி பொடித்து 2-4 கிராம் அளவு இரவில் ஆடை நீக்கிய பாலுடன் எடுத்துவர இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

நெல்லிவற்றலை நன்றாகக் கழுவி உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் எடுக்கலாம்.

ஆலம்பட்டையை நிழலில் உலர்த்தி பொடித்து குடிநீராகவோ (30மில்லி) அல்லது பொடியாகவோ 1 கிராம் அளவு உள்ளெடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

கடல்ராஞ்சி பட்டையை நன்றாக சிதைத்து அதில் 40 கிராம் எடுத்து நான்கு பங்கு தண்ணீரில் ஊறவிட்டு 30-40 மில்லி வீதம் காலை, மாலை எடுத்து வர நீரிழிவில் அதிகளவு சிறுநீர் வெளியேறுவதை கட்டுப்படுத்துகிறது.

தொட்டாற்சுருங்கி இலைகளையும் வேர்களையும் சேகரித்து நிழலில் உலர்த்தி, பொடித்து. அரித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் எடுத்து வர நீரிழிவு கட்டுப்படும்.

நிலப்பனாங் கிழங்குகளை பசுப்பாலில் சிறு சிறு துண்டுகளாக வெட்டி அவித்து மேற்றோலையும் நடு நரம்பையும் நீக்கி நிழலில் உலர்த்தி இடித்து அவித்து 8 கிராம் அளவு (1 தேக்கரண்டி) காலை, மாலை ஆடை நீக்கிய பாலில் எடுத்து வர நீரிழிவு கட்டுப்படும்.



**நீரிழிவு நோயாளர்களுக்கான மாதிரி உணவுப் பட்டியல்,**

காலை 6 மணி

ஆவாரம் பஞ்சாங்க தேனீர் 120 மில்லி.லீ, நாவல் விதைக் கோப்பி-120 மில்லி தனியாகவோ அல்லது ஆடை நீக்கி வற்றக்காய்ச்சிய பசுப்பாலில் எடுக்கலாம்.

காலை 8 மணி

பின் வருவனவற்றுள் ஏதாவது ஒன்று:

சப்பாத்தி-3 (உருளைக் கிழங்கு தவிர்த்து), உப்புமா- 1 கப், இடியப்பம்-3( ஆட்டாமா/ சிறுதானிய மா), தோசை/ இட்லி-2, எண்ணெய் தடவாத ரொட்டித்துண்டு-3, காலை உணவிற்கு பின்- கனியாத வாழைப் பழம் -1 (இதரை/கதலி)

காலை 11.00 மணி

வெண்ணெய் நீக்கிய மோர் (1-2 ரம்ளர்) எலுமிச்சம் பழரசம் (1-2 ரம்ளர் சீனி தவிர்த்து) காய்கறி/ சிக்கின் சூப் (மதிய உணவிற்கு1 மணி நேரம் முன்னர்)

மதியம் 1 மணி.

சோறு-1 1/2 கப் (அண்ணளவாக 75 கிராம்) சாம்பாறு 1/2 கப் (அதிக எண்ணெய் இல்லாமல் காய்கறிகள், கீரைகள் தாராளமாக சேர்க்கலாம்.)

மாலை 5.00 மணி

உழுந்து வடை/குரக்கன் அல்லது குறிஞ்சா பிஸ்கற்-3, சுண்டல் 1/2 கப், சீனி தவிர்ந்த தேனீர்.

இரவு 6.00 மணி

கோதுமை அரிசி ரொட்டி-2, வேக வைத்த காய்கறிகள்-1 கப் , குரக்கன் கூழ்-2 கப், கோதுமை அரிசி/ சிறு தானியமா தோசை-3, தானிய வகைமா இடியப்பம்-3 ,உப்புமா-1கப் ,(சாம்பார் 1/2 கப் பயன்படுத்தலாம்)

இரவு 10 மணி

ஆடைநீக்கிய பா்ல் 1கப் சீனி சேர்க்காமல், வாழைப் பழம் 1 சிறிது (நன்றாகப் பழுக்காதது) வாழைப்பழத்திற்கு பதிலாக ஜம்பு, கொய்யா, விளாம்பழம், அம்பிரலங்காய் பயன்படுத்தலாம்.

தக்காளி, வெண்பூசணி, பாகல், எல்லாக்கீரை வகைகள், கத்தரிப்பிஞ்சு, வெண்டி, முருங்கை, வாழைத்தண்டு, முட்டைகோஸ், அவரை இலைகள் பயன்படுத்தலாம். சிறிய மீன்வகைகள் எடுக்கலாம்.

தவிர்க்க வேண்டியவை-

சீனி, கருப்பட்டி, கற்கண்டு, குளுக்கோஸ், இனிப்பு வகைகள், ஜாம், கேக், ஐஸ்கிறீம், விரைவுணவுகள் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

சமையலுக்கு சிறிதளவு நல்லெண்ணெய் சேர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் பெயர் தாங்கிய நினைவு மண்டபம்திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த நினைவுமண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

(படம்:-சப்தசங்கரி)

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் இளைஞன் ஒருவரிடமிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 1 கிலோ 570 கிராம் கஞ்சா மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் இரணைப்பாலை பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் வீட்டினுள் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட போது அவரது வீட்டு அறையில் பொதி செய்யப்பட்ட வகையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1 கிலோ 570 கிராம் கேரளா கஞ்சாவினை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையிலான பொலிஸார் மீட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-299)


# கூறுவிலை கோரல்

**ஆலயத்திற்கு இரும்பினாலான சுருக்குக் கதவு செய்தல்**

**நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலிற்கு இரும்பினாலான சுருக்கு கதவுகள்** செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

இவ்வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் **ஆலயத்திற்கு நேரடியாக வருகை தந்து கதவுகள் பொருத்த வேண்டிய இடங்களை நேரடியாகப் பார்வையிட்டு** அதற்கு ஏற்ற வகையில் **கூறுவிலையினை** தாங்கள் **சுயமாக தயாரித்து பூரணப்படுத்தி 2023.12.03 ஆம் திகதி பி.ப 2.00** மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி **"செயலாளர், ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு **பதிவஞ்சல்** மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது **கோவில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல்** வேண்டும்.

**குறிப்பு:- கூறுவிலையானது பொருட்கள், கூலிகள் உப்பட்டதாக அமைதல் வேண்டும்.**

**ந.மோகனரூபன்,**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு.**

(C-7731)


# சாதனைப் பெண் கௌரவிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த 72 வயது சாதனைப் பெண் திருமதி. அகிலத் திருநாயகி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த அகிலத்திருநாயகி 1500 மீற்றர் ஓட்டப் போட்டி மற்றும் 5000 மீற்றர் விரைவு நடைப்போட்டி ஆகியவற்றில் 2 தங்கப்பதக் கங்களையும் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தையும்வென்று இலங்கைக்கும்முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தமைக்கு பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் குறித்த கௌரவமளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2976

**டால்சி**




**சரண்**




**ஜீவா**




**கடாவி**




**தரிஷ்**




**ஜானியா**




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 338





அதற்குள் அவனை இருபுறமும் பிணைத்திருந்த கயிறு முன்னால் தள்ளிக் கொண்டு போய்விட்டது.

"ஓ! அப்படியா? என் மைத்துனரின் ஆட்கள் எப்போதும் இப்படித்தான். உண்மைக் குற்றவாளியை விட்டு விட்டு யாரையாவது பிடித்துக்கொண்டு வந்து தொந்தரவு செய்வார்கள்! என்றாள் நந்தினி.

இதற்குள் கந்தன்மாறன், "வந்தியத்தேவன் இவர்களிடம் அவ்வளவு இலகுவில் அகப்பட்டுக் கொள்வானா? என் சிநேகிதன் பெரிய இந்திரஜித்தனாயிற்றே? என்னையே ஏமாற்றியவன் இந்த ஆட்களிடமா சிக்கிக் கொள்வான்?" என்றான்.

"இன்னமும் அவனை உம்முடைய சிநேகிதன் என்று சொல்லிக் கொள்கிறீரே!" என்றாள் நந்தினி.

"துரோகியாய்ப் போய் விட்டான். ஆனாலும் என் மனத்தில் அவன் பேரில் உள்ள பிரியம் மாறவில்லை!" என்றான் கந்தன்மாறன்.

"ஒருவேளை உம்முடைய அழகான சிநேகிதனை இவர்கள் கொன்று போட்டிருக்கலாம். இரண்டு ஒற்றர்களைத் தொடர்ந்து கோடிக்கரைக்கு இந்த வீரர்கள் போனதாகக் கேள்விப்பட்டேன்" என்று நந்தினி சொல்லிவிட்டு, குந்தவையின் முகத்தைப் பார்த்தாள்.

"கொன்றிருக்கலாம்" என்ற வார்த்தை குந்தவையைத் துடிதுடிக்கச் செய்தது என்பதை அறிந்து கொண்டாள். அடி கர்வக்காரி! உன் பேரில் பழி வாங்க நல்ல ஆயுதம் கிடைத்தது! அதைப் பூர்வமாக உபயோகப்படுத்தாமற் போனால் நான் பழுவூர் இளையராணி அல்ல! பொறு! பொறு!

குந்தவை தன் உள்ளக் கலக்கத்தைக் கோபமாக மாற்றிக் கொண்டு, "ஒற்றர்களாவது ஒற்றர்கள்! வெறும் அசட்டுத்தனம்! வர வர இந்தக் கிழவர்களுக்கு அறிவு மழுங்கிப் போய் விட்டது! யாரைக் கண்டாலும் சந்தேகம்! இந்த வைத்தியர் மகனை நான் அல்லவா கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக அனுப்பியிருந்தேன்? இவனை எதற்காகப் பிடித்து வந்திருக்கிறார்கள்? இப்போதே போய் உங்கள் மைத்துனரைக் கேட்கப் போகிறேன்!" என்றாள்.

"ஓகோ! தாங்கள் அனுப்பிய ஆளா இவன்? தேவி! சந்தேகம் என்று சொன்னீர்களே? எனக்குக்கூட இப்போது ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது. மூலிகை கொண்டு வருவதற்கு இவனை மட்டும் அனுப்பினீர்களா? இன்னொரு ஆளையும் சேர்த்து அனுப்பினீர்களா?" என்று நந்தினி கேட்டாள்.

"இவனோடு இன்னொருவனையுந்தான் அனுப்பினேன். இரண்டு பேரில் ஒருவனை இலங்கைத்தீவுக்குப் போகும்படி சொன்னேன்."

"ஆகா! இப்போது எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது! நான் சந்தேகித்தபடிதான் நடந்திருக்கிறது!"

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன சந்தேகித்தீர்கள்? என்ன நடந்திருக்கிறது?"

"இனிச் சந்தேகமே இல்லை உறுதிதான், தேவி! தாங்கள் இவனோடு சேர்த்து அனுப்பிய ஆள் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிந்தவனா? புதிய மனிதனா?"

குந்தவை சற்றுத் தயங்கி, "புது மனிதனாவது? பழைய மனிதனாவது? காஞ்சிபுரத்திலிருந்து ஓலை கொண்டு வந்தவன் என் தமையனிடமிருந்து வந்தவன்" என்றாள்.

"அவனேதான்! அவனேதான்!"

"எவனேதான்?"

"அவன்தான் ஒற்றன்! சக்கரவர்த்திக்கு ஓலை கொண்டு வந்ததாகத்தான் இங்கேயும் அவன் சொன்னானாம்."

"என்ன காரணத்தினால் அவனை ஒற்றன் என்று இவர்கள் சந்தேகித்தார்களாம்?"

"எனக்கென்ன தெரியும், அதைப்பற்றி? அதெல்லாம் புருஷர்கள் விஷயம்! பார்க்கப்போனால், அந்த ஒற்றனும் சந்தேகப்படும்படியாகத்தான் நடந்திருக்கிறான். இல்லாவிட்டால் இரகசியமாக இரவுக்கிரவே ஏன் தப்பி ஓட வேண்டும்? இந்தச் சாது மனிதருடைய முதுகிலே எதற்காகக் குத்தி விட்டுப் போக வேண்டும்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முதல் வழக்கில் வெற்றி

(தொடர்ச்சி)

மிகவும் புத்திசாலியான பீர்பால் சரியான தீர்ப்பு வழங்குவார் என்று அவர் உறுதியாக நம்பினார்.

பீர்பால் இளைஞனை நோக்கி, "நீ கொடுத்த வாக்கில் உறுதியாக இருக்கிறாய் அல்லவா?" என்றார். "அதில் என்ன சந்தேகம்? கண்டிப்பாக அப்போது அதில் கிடைக்கும் வருமானத்திலிருந்து என் குருநாதருக்கு சேர வேண்டிய தட்சிணையைக் கட்டாயம் தந்து விடுவேன்" என்றான் இளைஞன்.



பிறகு கிழவரை நோக்கி, "பிஹாரியின் நிபந்தனையை நீங்கள் ஆரம்பத்திலேயே ஒப்புக் கொண்டீர்கள் அல்லவா?" என்று கேட்டார் பீர்பால் "ஆம் ஐயா!" என்றார் கிழவர்.

"அப்படியானா[illegible]டப்படி இளைஞனின் தரப்பில்தான் நியாயம் உள்ளது. அவன் வழக்கில் வெற்றி பெற்று தட்சிணை தரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டியதுதான்" என்றார் பீர்பால். பீர்பாலையும், அக்[illegible]னை[illegible]ங்கிவிட்டு அவர் தள்ளாடித் தள்ளாடி வெளியேற, இளைஞன் பிஹாரி வெற்றிப் பெருமிதத்துடன் வெளியேறினான்.

திடீரென பீர்பால் பிஹாரியை அழைத்து, "பிஹாரி! இதுதான் சக்கரவர்த்தியின் நீதிமன்றத்தில் உன்னுடைய முதல் வழக்கு! உன்னுடைய வழக்கை விசாரிக்க வேறு வழக்கறிஞரை நியமிக்காமல் நீயே உன் தரப்பு நியாயத்தை வெகு அழகாக எடுத்துக் கூறினாய்" என்றார் பீர்பால். பிஹாரி மகிழ்ச்சியுடன், "நன்றி ஐயா!" என்றான்.

பீர்பால் தொடர்ந்து, "அதாவது உன்னுடைய முதல் வழக்கில் நீயே வழக்கறிஞராக இருந்து வாதாடி அதில் வெற்றிபெற்று விட்டாய் இல்லையா?" என்று பீர்பல் கேட்டார். "ஆம் ஐயா!" என்றான் பிஹாரி மகிழ்ச்சியுடன்.

"அப்படியானால் நீ வழக்கறிஞராக இருந்து வெற்றி பெற்ற முதல் வழக்கு இது! நீ வாக்களித்தபடியே, குருதட்சிணையை உன் குருவிற்கு இப்போதே இங்கேயே கொடுத்து விடு!" என்றார்.

ஒருகணம் திகைத்துப் போன அனைவரும் மறுகணமே கைதட்டி ஆர்ப்பரித்தனர். கிழவர் பீர்பாலுக்கு மனமார நன்றிகூற அக்பர் பீரபாலை மிகுந்த மகிழ்ச்சியுடன் தழுவிக் கொண்டார்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து விடாதீர்கள். வெற்றிக்களத்திற்கு இன்னும் சில மைல்களே உள்ளன. நம்பிக்கையுடன் முன் செல்லுங்கள், வெற்றி நிச்சயம்.

– ஹுதர் ஃபோர்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்தனப் பேழைகளில் துயிலுகின்ற மாவீரர்களே!

எங்கள் மாவீரர்களே! சந்தனப் பேழைகளில் உறங்குகின்ற மாவீரர்களே!

ஒரு கணம் துயிலெழுந்து பாருங்கள். உங்கள் விழிப்புக்காகக் காத்திருக்கின்ற உங்கள் உறவுகளுடன் பேசுங்கள்.

விடுதலைக்காக உங்கள் உயிரைத் தியாகம் செய்தீர்கள்.

நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் களமாடினீர்கள்.

உங்களின் உயிர்த்தியாகம் அப்பழுக்கற்றது. தமிழ் இனத்தின் வாழ்வு ஒன்றுதான் உங்களின் இலட்சியமாய் இருந்தது.

அதனாலேயே நீங்கள் பெற்ற தாயை, தந்தையை, சகோதரங்களை, உற்ற உறவுகளை எல்லாம் பற்றறுத்து தமிழ்த் தாயை நேசித்தீர்கள்.

என்ன செய்வது எங்கள் தமிழினத்தின் பரம்பரைச் சொத்தாகிய ஒற்றுமையீனமும் போட்டியும் காட்டிக்கொடுத்தலும் உங்கள் தியாகத்துக்குத் தீவினையாகின.

அந்தோ உங்களின் உயிர்த்தியாகம் மண் விடுதலையைத் தராது போயினும் நீங்கள் செய்த தியாகமே இன்றுவரை நம் தமிழினத்தை உலகெங்கும் வாழ வைக்கிறது.

ஆம், மாவீரர்களே! உங்கள் உறக்கம் கூட எதிரிக்குப் பயமாக இருக்கிறது.

ஏன்? தெரியுமா சில வேளை நீங்கள் உயிர்த்தெழுந்தால் என்ற ஏக்கமே அந்தப் பயத்துக்கு காரணமாம்.

இல்லையென்றால், மாவீரர்களாகிய உங்களை நினைவேந்துவதை அவர்கள் ஏன் தடுக்க வேண்டும்.

நீதிமன்றப் படிகள் ஏறி மாவீரர்களை நினைவேந்துவதைத் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைப்பது ஏன்? உலகம் எங்கும் நினைவேந்துவது உரிமையாக இருக்க, இங்கு மட்டும் நினைவேந்தலைத் தடுக்க துடிக்கின்ற ஆட்சியும் படைத்தரப்பும் இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் நீங்கள் மீண்டும் உயிர்த்தெழுந்தால் நிலைமை என்னவாகுமோ என்ற ஏக்கம் தானே.

மாவீரர்களே! மணியோசை கேட்கிறது.

அதோ! தீபங்கள் ஏற்றப்படுகின்றன. உங்கள் கல்லறைமேல் விழுகின்ற உப்புநீர் உங்கள் உறவுகளின் கண்ணீர். அது துயிலுகின்ற உங்களை விழித்தெழ அழைக்கின்ற பாசத்தின் செந்நீர்.

ஆம் இன்று நவம்பர் 27. நீங்கள் விழித்தெழுந்து உங்கள் உறவுகளுடன் மௌனமாகப் பேசுகின்ற திருநாள்.

ஆகையால் ஒருகணம் விழித்தெழுங்கள். கூவிடும் எங்களின் குரல் மொழி கேட்க, சந்தனப்பேழைகளில் உறங்குகின்ற மாவீரர்களே உங்கள் திருமுகம் காட்டிட ஒருகணம் விழித்தெழுங்கள்.

### லங்கா சதொச ஊடாக

## அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 400 பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 400 பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தகவலை வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் சம்பா அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)

### க.பொ.த சாதாரண தர

## பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதில் தாமதம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள் பெறுபேறுகள் வெளியாகும் என கல்வி அமைச்சு அறிவித்திருந்த நிலையில், தற்போது அதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவாக இருப்பதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடைமுறை ரீதியாக நிலவுகின்ற சிரமங்களால் பரீட்சை முடிவுகள் வெளியாவது இன்னும் தாமதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இன்னும் ஓரிரு வாரங்களில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட தீவிர முயற்சி எடுத்து வருவதாக தெரிவித்தார். (ம-7)

## சாவகச்சேரியில் ஒரு தொகை மதுப் போத்தல்கள் மீட்பு

### சந்தேகத்தில் மூவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் ஒரு தொகுதி மதுப்போத்தல்கள் மீட்கப்பட்டுள்ள தோடு சந்தேகத்தில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி தினத்தன்று வரணி குடமியன் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒருதொகை மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரி மதுவரி உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி வீட்டில் புதைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 250மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 91 மதுபானப் போத்தல்கள் மற்றும் 15பியர் ரின்கள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேக நபர்கள் மூவரும் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண உதவி மதுவரி ஆணையாளர் சுனில்சாந்த மற்றும் மதுவரி அத்தியட்சகர் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் மேற்படி மீட்பு மற்றும் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,30)

## பிரதமர் அலுவலக செலவீனம் 46 சதவீதமாக குறைப்பு

(கொழும்பு)

பிரதமர் அலுவலக செலவுகளை குறைக்க முடிந்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டு 46 சதவீதமாக செலவுகள் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு பிரதமர் அலுவலகத்தின் செலவுகள் 21 வீதமாகவும், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குள் 46 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் 1661.7 மில்லியன் ரூபா செலவானது. 2022 ஆம் ஆண்டில் 1310.4 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையில் செலவீனத்தை 705.7 மில்லியன் ரூபாவாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு பிரதமர் அலுவலகத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி 1661.7 மில்லியன் ரூபாவாகும். அத்துடன், 2022 ஆம் ஆண்டு 1432.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதும் 1310.4 மில்லியன் ரூபா மாத்திரம் செலவிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு 1012 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், 705.7 மில்லியன் ரூபா மாத்திரம் செலவிடப்பட்டுள்ளது.

தினேஷ் குணவர்தன பிரதமராக பதவியேற்பதற்கு முன்னதாக, 2021 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதமர் அலுவலகத்தில் 500 பணியாளர்கள் காணப்பட்ட நிலையில், தற்போது குறித்த எண்ணிக்கை 285 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 107 மில்லியன் ரூபாவாக இருந்த எரிபொருள் செலவு 2023 ஆம் ஆண்டில் 79.3 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

**“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்.”**

*கிரேக்கப் பழமொழி*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** அளவெட்டி, பன்னாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** நவகம ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16 2023
வறுமையும், வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமை ஒழிப்போம்! வன்முறை தடுப்போம்! சமத்துவமான சமுதாயத்திற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.!”
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கையைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு வேலையை செய்ய வேண்டி இருப்பினும் அதனை நிறைவேற்ற சில அதிகாரிகளுக்கு கையூட்டு வழங்க வேண்டியவர்களாக மக்கள் காணப்படுகின்றனர். அதனால் அரச சேவைகளை சாதாரண மக்கள் இலகுவில் மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே பொதுவான குற்றச்சாட்டாகும்.

மக்கள் கடந்த ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த போது ஊழல் பேர்வழிகள் ஒழிக்கப்பட வேண்டும் அவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தனர். ஊழல் மோசடிகளே ஆட்சி கலைக்கப்படவும் காரணமாக அமைந்தன. ஆயினும் ஊழல் மோசடிகள் கட்டுக்கடங்கியுள்ளனவா? இல்லை முற்றாக ஒழிக்கப்படுமா ? என்பது தான் அனைவர் முன்னும் எழுந்துள்ள கேள்வி.

வளர்முக நாடுகளில் ஊழல்கள், நிதி மோசடி என்பன சர்வசாதாரணமாக தொடர்ந்து வருகின்றன. மக்கள் வரிப்பணத்தைக் கொள்ளையடித்து அரசியல்வாதிகளும் சரி அவர்களின் உதவியாளர்களும் சரி சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். அப்பாவி மக்கள் மாத்திரமே தொடர்ந்து ஏமாளிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டில் ஊழல் முற்றாக ஒழிக்கப்படும், ஊழல்வாதிகள் கைது செய்யப்படுவார்கள் என்ற வாக்குறுதிகளை ஆட்சியாளர்கள் அவ்வப்போது வாரி வழங்குகின்ற போதிலும் நடைமுறையில் அவற்றைக் காணமுடியவில்லை. உயர் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் ஊழல் தலை விரித்தாடுவதையே காண முடிவதாக மக்கள் புலம்புகின்றனர்.

அதாவது இதனை அவா நிறைவு என்று கூறுவர். அவா நிறைவு என்பதில் பணம் அல்லது பணத்தால் மதிப்பிடக்கூடியவைகளும் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் பணத்தால் மதிப்பிட முடியாவிட்டாலும் உதவிகளும் நன்மைகளும், மானசீக திருப்தி, பாலியல் கோரிக்கை அனைத்தும் உள்ளடங்கும்.

**ஊழல் என்றால் என்ன?**

ஊழல் (corruption) என்பது, வழங்கப்பட்ட அதிகாரத்தையோ, பதவியையோ தவறாகப் பயன்படுத்தி தனிப்பட்ட பயன்களைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கும். ஊழல் என்பதில், லஞ்சம், கையாடல் போன்றவை உள்ளடங்கும். அரசாங்கத்தின் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் அல்லது அரசுபணியில் இருக்கும் பிற ஊழியர்கள் அலுவல் முறையில் தனிப்பட்ட நலன்களுக்காகச் செயற்படும்போது அரசாங்க அல்லது அரசியல் ஊழல் இடம் பெறுகிறது. அரசியல்துறைப் பேராசிரியரான இசுட்டீபன்டி. மொரிசு, அரசியல் ஊழல் என்பது தனிப்பட்ட நலங்களுக்காகப் பொது அதிகாரத்தைச் சட்டத்துக்குப் புறம்பாகப் பயன்படுத்துவதாகும் என்கிறார்.

சட்டத்துக்கு உட்பட்ட ஊழல் என்பது சட்டத்துக்குள் அடங்கக்கூடிய வகையில் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும். அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் தமது வசதிகளுக்காகச் சட்டங்களை உருவாக்கும் வல்லமை கொண்டிருப்பதால் இந்நிலை ஏற்படுகிறது.

ஊழல் பல அளவுகளில் இடம் பெறக்கூடும். பொதுவாக குறைவான எண்ணிக்கையான மக்களிடையே சிறு சலுகைகள் பெறுதல் என்ற அளவில் ஊழல்கள் இடம் பெறுவது உண்டு. இது சிறு ஊழல். சிறு ஊழல்கள் அரச அதிகாரிகள் பொது மக்களை சந்திக்கும் போது பொது சேவைகளை செயற்படுத்தும் போது நடைபெறுகிறது. எடுத்துக்காட்டாக, பதிவு அலுவலகங்கள், காவல் நிலையங்கள்,மற்றும் பல தனியார் மற்றும் அரசுத்துறைகள் போன்ற பல சிறிய இடங்களில் நடைபெறுகின்றது.

அரசாங்கத்தைப் பாதிக்கக் கூடிய அளவுக்குப் பெரிய அளவில் ஊழல்கள் இடம்பெறலாம். பெரும் ஊழல் என்பது அரசியல், சட்ட மற்றும் பொருளாதார அமைப்புகளை கணிசமான முறையில் சீர்குலைக்கும் வகையில் அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களில் நிகழும் ஊழல் என வரையறுக்கப்படுகிறது. இத்தகைய ஊழல்கள் சர்வாதிகார அல்லது சர்வாதிகார அரசாங்கங்களைக் கொண்ட நாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. மேலும் ஊழலுக்குப் போதுமான சட்டங்கள் இல்லாத நாடுகளிலும் காணப்படுகிறது.

இவற்றை விட நாளாந்த சமூக அமைப்பின் ஒரு பகுதியாக ஊழல்கள் இருப்பது உண்டு. இவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கான அறிகுறிகளாகவும் இருக்கின்றன. இது ஒழுங்கமைந்த ஊழல் (முறையான ஊழல்) எனப்படும். இது முதன்மையாக ஒரு அமைப்பு அல்லது செயல்முறையின் பல வீனங்களால் ஏற்படுகிறது.

2017 கணக்கெடுப்பு ஆய்வின்படி, பின்வரும் காரணிகள் ஊழலுக்குக் காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன. பணத்தின் பேராசை, ஆசைகள், சந்தை மற்றும் அரசியல் ஏகபோகத்தின் உயர் நிலைகள், குறைந்த அளவிலான ஜனநாயகம், பலவீனமான சமூக பங்கேற்பு மற்றும் குறைந்த அரசியல் வெளிப்படைத்தன்மை, அதிக அதிகாரத்துவம் மற்றும் திறமையற்ற நிர்வாக கட்டமைப்புகள், குறைந்த பத்திரிகை சுதந்திரம், குறைந்த பொருளாதார சுதந்திரம், பெரிய இனப் பிளவுகள் மற்றும் அதிக அளவிலான குழு சார்பு வசதிகள், பாலின சமத்துவமின்மை, வறுமை, அரசியல் ஸ்திரமின்மை, பலவீனமான சொத்து உரிமைகள், ஊழல் நிறைந்த அண்டை நாடுகளில் இருந்து தொற்று, குறைந்த அளவிலான கல்வி, சமுதாயத்தில் ஈடுபாடு இல்லாமை, ஆடம்பரமான குடும்பம், வேலையின்மை, ஊழலுக்கு எதிரான சரியான கொள்கைகள் இல்லாதது போன்றவையாகும்.

முறையான ஊழல் மற்றும் பெரும் ஊழலில், ஒரே நோக்கத்துடன் ஒரே நேரத்தில் பல ஊழல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**ஊழலின் பல்வேறு வடிவங்கள்**

ஊழலின் பல்வேறு வடிவங்களான மோசடி, இலஞ்சம், அநீதியான நிர்ப்பந்தம், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல், உள் வியாபாரம், அனுசரணை வழங்கல், சட்ட விரோதமான கொடைகள், பாலியல் லஞ்சம் போன்றவையாகும்.

**மோசடி:-** ஒரு நபர் தனது இலாபத்திற்கோ அல்லது வேறு ஒரு நபரின் இலாபத்திற்கோ அல்லது நன்மைக்கோ மற்றுமொரு நபரை ஏமாற்றுதல் அல்லது பொறியில் சிக்கவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இது சொத்துக்களை அணுகக் கூடிய ஒருவரை சட்டவிரோதமாக கட்டுப்படுத்துவதை உள்ளடக்கு கிறது. மோசடி என்பது நிதி அல்லது சொத்துக்களின் உரிமையாளரை அங்கீகரிக்கப்படாத தரப்பினருக்கு வழங்கி ஏமாற்றுவதையும் உள்ளடக்கியது.

ஊழல் செய்யும் நபர்களின் தனிப்பட்ட நலன்களுக்கு நன்மைகளை அதிகப்படுத்துவதற்காக பொதுத் திட்டங்களுக்காக உத்தேசித்துள்ள நிதியை வேண்டுமென்றே தவறாக வழிநடத்தப்படும் போது நடைபெறுவது ஊழல் அரசியல் நடவடிக்கை ஆகும்

**இலஞ்சம் :-** தனக்கு அல்லது வேறு ஒரு நபருக்கு நன்மை செய்வதற்கு, அரசுக்கோ அல்லது வேறு ஒரு நபருக்கோ தீங்கு விளைவிப்பதற்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு நபர் நடவடிக்கை எடுத்தல். இங்கு இந்நடவடிக்கைக்கு அல்லது தீர்மானத்திற்கு ஒரு கொடுப்பனவு வழங்கப்படுதல்.

இலஞ்சம் என்பது தனிப்பட்ட ஆதாயத்திற்கு ஈடாக பரிசுகள் மற்றும் உதவிகளை முறையற்ற முறையில் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. இது ஊழலின் பொதுவான வடிவம். இவ்வடிவத்தில் வழங்கப்படும் சலுகைகள் பலதரப்பட்டவை. அவை பணம், பரிசுகள், சொத்துக்கள், பதவி உயர்வுகள், பாலியல் உதவிகள், பணியாளர்களின் சலுகைகள், நிறுவனப் பங்குகள், பொழுதுபோக்கு சலுகைகள், வேலைவாய்ப்பு, அதிகாரிகளை மிரட்டல், மிரட்டி பணம் பறித்தல் மற்றும் அரசியல் பலன்கள் ஆகியவை அடங்கும்.

இலஞ்சம் சில சமயங்களில் ஊழலை மற்ற நோக்கங்களுக்காக முறையாகப் பயன்படுத்துவதில் ஒரு பகுதியாக இருக்கலாம், உதாரணமாக மேலும் ஊழலைச் செய்ய உதவுதல்.

**அநீதியான நிர்ப்பந்தம் :-** ஒரு விடயத்தைச் செய்வதற்கு அல்லது செய்யாமல் இருப்பதற்கு பணமோ அல்லது பெறுமதி மிக்க ஒரு பொருளையோ அல்லது சேவையையோ வழங்குமாறு ஒரு நபரை நிர்ப்பந்தித்தல், இதைச் செலுத்தாவிடின் உடல் ரீதியான பாதிப்பு ஏற்பட இடமுண்டு.

**அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல்:-** சட்டத்தால் தனக்குரித்தாக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகா ரத்தைப் பயன்படுத்தி ஒரு பிரிவி னருக்கு மாத்திரம் நன்மை கிடை க்கக் கூடியவாறு தவறான அநீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

சட்டங்களைத் தவறான முறையில் செயற்படுத்தல். அதிகார உரிமை கொண்ட நபர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களைப் பற்றிய தவறற்ற தன்மையையும் நியாயமான தன்மையையும் அளவிடும் நடைமுறை இன்மையால் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தலுக்குக் காரணமாக அமைகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

தித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் டிலக்சன் (வயது - 23) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

வீதியால் சென்ற இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாளால் வெட்டியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7,9)

## விடுதலைப்...

இடம்பெற்று வருகின்றன.

எனினும், இதுவரை குறித்த அகழ்வுப்பணிகளில் எந்தவொரு ஆயுதங்களும் மீட்கப்படவில்லை என தெரியவருகின்றது. (ம-7,9)

## பிரபாகரன்...

பிரபாகரனின் 69வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மதிமுக கட்சிப் பொதுச் செயலாளர் வைகோ அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்கள் பேட்டி அளித்தபோது அவர் கூறியதாவது,

இலங்கை தமிழர்களுக்காக போராடிய எங்கள் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்ற எண்ணத்துடன் நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

பழ.நெடுமாறன் ஆகியோர் விடுதலைப்புலிகளுடன் பல ஆண்டுகளாக இருந்தவர்கள் அவர்கள் யாரும் பொய் சொல்ல வேண்டும் என எந்த அவசியமும் கிடையாது. பிரபாகரன் திரும்பி வருவார் எனும் நம்பிக்கையுடன் நாங்கள் உள்ளோம். அவர் உயிருடன் இருக்கின்றார் என்பதே எங்களது கருத்து என வைகோ தெரிவித்துள்ளார். (ம-7,9)

## ஜனாதிபதித்...

செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,9)

## தலைவர்...

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் பிரபாகரனின் உருவப்படத்தினை வைத்து கேக் வெட்டியதுடன் இனிப்புக்களை பரிமாறிக் கொண்டாடியுள்ளனர். (ம-7,9)

## தமிழ்த் தேசிய...

ஏற்படும் இடயூறுகளுக்கு வருந்துவதாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, நடைபெறவிருக்கும் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ம-7,9)

## மாவீரர்...

கட்டப்பட்டிருக்கின்ற சிவப்பு மஞ்சள் கொடிகளை அகற்றுமாறு தெரிவித்துள்ளனர்.

இதன்போது அதனை அகற்ற முடியாது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் பொலிஸார் திரும்பி சென்றுள்ளனர்.

எவ்வாறாயினும் வழமை போன்று குறித்த சாள்ஸ் மண்டப பகுதியிலே இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறும் எனவும் அனைத்து உறவுகளையும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7,9)

## மாவீரர்களை...

தமிழினத்தின் உரிமைக்காகப் போராடி இன்னுயிர்களை ஈந்த நாயகர்களை - வீரமறவர்களை - மாவீரர் தினமான இன்று நினைவுகூருவதற்குத் தாயகத்தில் தமிழ் மக்கள் பேரெழுச்சியுடன் தயாராகி வருகின்றார்கள்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், விசேட இடங்களில் மாவீரர் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்கள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக் கப்பட்டு வருகின்றன. இன்று மாலை 6.05 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அரச புலனாய்வாளர்களின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மாவீரர் தின நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் இன்று உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

மாவீரர் தினத்தை பேரெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் கடந்த ஒரு வாரமாக மக்களின் பங்களிப்புடன் சிரமதானம் செய்யப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் துப்புரவுப் பணிகள் நிறைவடைந்து நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இதனைவிடவும், நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக, மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக கடந்த 21ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், வடமராட்சி - நெல்லியடி மாலி சந்தி பிள்ளையார் கோவில் முன்பாக, மாவீரர் நினைவாலயம் பொது மக்கள் அஞ்சலிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு பெருமளவானவர்கள் மாலையில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மேலும், யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள நினைவுத் தூபியில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இறுதி நாள் அஞ்சலிக்கான விசேட ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில்கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், தேராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில்அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான் குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில்உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சன், முள்ளிக்குளம் துயிலுமில்லங்களிலும், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடிமுன்மாரி, தரவை, தாண்டியடி, வாகரை கண்டலடி ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்திலும் அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனைவிடவும், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் விசேட நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருகோணமலை ஆலங்குளத்தில் மாவீரர் நினைவேந்தலைச் செய்வதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9)


லக்சி 7 VIP
திகதி 2023.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 136
H 3 6 1 3 8 9 H

தன நிதானய
திகதி - 2023.11.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1340
F 11 26 41 76 F
42743

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3552
சீட்டிழுப்பு திகதி 26.11.2023
R 02 63 76 80
R 22327

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 0619
கும்பம் 05 08 38 48 கும்பம்
26828 29

மஹஜன சம்பத
திகதி 2023/11/26
சீட்டிழுப்பு இலக்கம் 5310
L 5 8 8 8 2 3

மெகா பவர்
திகதி 26/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1658
L 08 12 21 78 79
18520

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 26.11.2023 வெற்றி வாரம் 018
X 8 1 5 3 3 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,284,195.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 18 06 15 34 59
சுப்பர் இலக்கம்
1460 மஞ்சள் 2023.11.26 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 469,784,864.20

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2110
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,799,648/-
ADA KOTIPATHI
03 07 42 57 C

சீட்டிழுப்பு வாரம் 3996
சீட்டிழுப்பு திகதி 2023.11.26 ஞாயிற்றுக்கிழமை
25 29 32 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,108,088/-

சசிரி
வெற்றி வாரம் 407
2023.11.26 கபிலம்
வெற்றி இலக்கங்கள் 15 16 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,792,280/-

சனிதா
திகதி 2023.11.26 வெற்றி வாரம் 4445
12 37 58 73 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,001,284.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2284 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.26 தினம் ஞாயிற்றுக்கிழமை
40 48 55 72 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,234,180/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மேல், தெற்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அதிக டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 74,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அதன் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன கூறியுள்ளார்.

மேலும், டெங்கு காய்ச்சல் தடுப்புக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டம் குறித்தும் அவர் விளக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,9)

# புலி ஆதரவாளர்கள் முயற்சித்ததை சஜித் பிரேமதாச முயற்சிக்கின்றார்

## நாமல் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலி ஆதரவாளர்கள் முயற்சித்ததையே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் முயற்சிக்கின்றார் என நாமல் எம்.பி. குற்றம் சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் பிரஜா உரிமையை இல்லாதொழிப்பதற்கான கையொப்ப சேகரிப்பு பிரசாரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாமல் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில்மேலும் கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ச,

புலி பயங்கரவாதிகளை தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த ராஜபக்சவை, இராணுவ நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று புலி அனுதாபிகள் அவரது சிவில் உரிமைகளை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர்.

அபத்தமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மகிந்த ராஜபக்சவை கொலை செய்ய முயற்சித்த அவர்கள், தற்போது வரிகளை குறைத்து பொருளாதாரத்தை திவாலாக்கி விட்டதாக கூறி குடியுரிமையை இல்லாதொழிக்க முயல்வதாக நாமல் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவுக்கு இன்னும் தனிநபராக வாக்குப்பலம் இருப்பதாகவும், அதனால் எதிரணியில் உள்ள அனைவரும் ராஜபக்சவுக்கு பயப்படுவதாகவும் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச எப்பொழுதும் மக்களுக்காகவே தீர்மானங்களை எடுத்தார். பல தலைவர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராமல் சர்வதேச சமூகத்தை மகிழ்வித்தனர். பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் சேர்க்கப்பட்டது.

மக்களைத்தவிர வேறு யாரையும் மகிழ்வித்து தனது அதிகாரத்தை பாதுகாக்க மகிந்த முயற்சிக்கவில்லை என்றார். (ம-7,9)

ENGLISH LITERATURE
GRADE-10 (2024)
P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip. in Eng. (18007)
NEWTON GROUP CLASSES
Near TCT Super Market
☎-077 792 3653

காணி விற்பனைக்கு
மீசாலை மேற்கு டச்சு வீதியிலுள்ள நாற்புறமும் சுற்றுமதிலுடன் கூடிய நான்கு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (17709)
077 560 7641
077 081 4874


CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7735)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வீடு விற்பனைக்கு
70/24, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் : செவ்வாய், புதன் கிழமைகளில் பி.ப 4-6
தொடர்புகளுக்கு : (18016)
076 554 4939

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7735)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய் பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18013)
076 825 7716 (ஆகாஸ்)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் மகாலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல.69, கணேசபுரம் மற்றும் இல.20/1, திருவையாறு கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகாலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நவரத்தினம் - ரூபவதி தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணவேணி (கிச்சா) அவர்களின் பாசமிகு கணவரும் மிருணாளினி ( யாழினி - லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும் ரமணதாசன் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும் அக்சயன், அஸ்விதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2023) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் திருவையாறு இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 212 8283 (C-7733)

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்
பொது சத்திரசிகிச்சை நிபுணர்
DR.S.மதிவாணன்
MBBS, MD SURGERY, MRCS (ENG),
FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)
CONSULTANT SURGEON
BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST
திங்கள் மற்றும் சனி கிழமைகளில் 4.30 PM
சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்
முதல் 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்
விசேட குருதிக்குழாய் சத்திரசிகிச்சை கிளினிக்
* ஆறாத புண்களுக்கான சிகிச்சை
* கால் இரத்த நாள் (வரிக்கோஸ்) வீக்கத்திற்கான சிறப்பு சிகிச்சை
* கால் வீக்கத்திற்கான சிகிச்சை
* நீரிழிவுநோயின் பின்னர் கால்களை பரிசீலித்தலும் தீர்வு வழங்குதலும்
பொது சத்திரசிகிச்சை
* மார்பு கட்டிகள், நீர கட்டிகள்
* வயிற்று நோவு
* தைரொயிட் பிரச்சினைகள்
* பித்தப்பை உபாதைகள்
* கேணியா
* மலவாசல் இரத்தக்கசிவுகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்
(C-7732)
முன் பதிவுகளுக்கு :- 0770661031 ☎ 0212255157

காணி விற்பனைக்கு
GOLDEN Real Estate
கைதடிச் சந்திக்கு அருகாமையில் 51 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
■ கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
■ வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம் ■ 20 அடி பாதை
■ A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
■ நன்னீர் ஊற்று நிலம்
■ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
■ சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
■ வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
■ வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
■ சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
■ பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(18017)
071 173 3911,
076 853 5022, 076 213 7239

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org